தனி இதழ் ஒரு அணா
இலங்கையில் 10 சதம்
மலர் 1] [இதழ் 133

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்..அண்ணதுரை

"THE NAM NADU" A TAMIL DAILY: THE OFFICIAL ORGAN OF THE D.P.F.

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

சென்னை: கார்த்திகை 2உ செவ்வாய் (17—11—53) ★ ★ ★ வெளியூர்: கார்த்திகை 3உ புதன் (18—11—53)

புதிய கல்விக்கு மாணவர் கண்டனம்

கருணாநிதி—வில்லாளன் சந்திப்பு

★

14—11—53 மாலை 3 மணிக்கு தோழர் தில்லை-வில்லாளன், கல்லக்குடி போராட்டக் குழு தோழர்கள் மணி, பராங்குசம், நடராசன் ஆகியோர் திருச்சி சிறைச்சாலையில் உள்ள தோழர்கள் கருணாநிதி, முல்லை சக்தி ஆகியோரைக் கண்டு பேசினர்.

தோழர் கருணாநிதி மிகவும் உற்சாகமாக இருக்கிறார்.

கோதுமை விலை குறைவு

புதுடில்லி, நவ. 17—

மாநில சர்க்கார்களுக்கு சப்ளை செய்யப்படும் இறக்குமதி செய்யப்பட்ட கோதுமையின் விலையை மணங்கு ஒன்றுக்கு ஒரு ரூபாய் வீதம் உடனடியாகக் குறைத்துவிடுவதென இந்திய சர்க்கார் முடிவு செய்துள்ளனர்.

மாணவர் முடிவிற்கு முதல் மந்திரி மதிப்பளிக்க வேண்டும்!

353 மாணவர்கள் திட்டத்தை எதிர்த்தனர்; 173 மாணவர்களே ஆதரித்தனர்!

சி. ஆர். கல்வித் திட்டத்திற்கு திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரி மாணவர் தீர்ப்பு!

திருச்சி, நவ. 16—

"ஆச்சாரியார் அரசியல் சூதாட்டக்காரர்; பசுமாடு தன கன்றின் அழுக்கை நக்கித் துடைப்பதற்கும், கன்றைக் கொல்வதற்கு அதை, கசாப்புக் கடைக்காரன் கழுவுவதற்கும் உள்ள வேறுபாடே ஆச்சாரியார் கல்வித் திட்டத்திற்கும், மாண்டிசோரி கல்வித் திட்டத்திற்கும் உள்ள வேறுபாடு."

—இவ்வாறு, புதிய கல்வித் திட்டம் பற்றி, நடைபெற்றதோர் விவாதத்தில், தோழர் இருதயராஜ் குறிப்பிட்டார்.

13-11-53ல், திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரி தமிழ் மன்றத்தின் ஆதரவில், லாலி மன்றத்தில், பாதிரி ராஜமாணிக்கம் தலைமையில், புதிய கல்வித் திட்டம் பற்றி விவாதம் நடைபெற்றது.

தோழர் லோபோ பிரபு எம். ஏ. பி. எல், கல்வித் திட்டத்தை ஆதரித்துப் பேசினார்; தோழர் இருதயராஜ் எம். ஏ. கல்வித் திட்டத்தை எதிர்த்துப் பேசினார்.

முடிவில் வாக்கெடுப்புக்கு விடப்பட்டதில் திட்டத்தை 178 பேர் ஆதரித்தும், 353 பேர் எதிர்த்தும் வாக்களித்தனர். முடிவில், 'திட்டம் உகந்ததல்ல,' என்று தலைவர் கூறினார்.

தோழர் லோபோ பேசுகையில், "ஆச்சாரியார், ஜனநாயகத்தைக் கொலை செய்தவர்; எனினும், அவரது திட்டத்தில் நன்மை உண்டு," என்றார்.

தோழர் இருதயராஜ் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"ஆச்சாரியார் அரசியல் சூதாட்டக்காரர்; பசுமாடு கன்றின் அழுக்கை நக்கித் துடைப்பதற்கும், கன்றைக் கொல்வதற்கு அதை, கசாப்புக் கடைக்காரன் கழுவுவதற்கும் உள்ள வேறுபாடே ஆச்சாரியார் கல்வித் திட்டத்திற்கும் மாண்டிசோரி கல்வித் திட்டத்திற்கும் உள்ள வேறுபாடு" என்றார்.

அமைச்சரின் அலட்சியம்

கோவை, நவ. 16—

சென்னை அமைச்சர் வி. சி. பழனிச்சாமி கவுண்டர் சேலம்

ஏழை உழவரின் உண்ணா நோன்பு

...ஊரிலிருக்கும் ஒரு புறம்போக்கு நிலத்தை வீரமான்ய ...ராக எடுத்துக்கொண்டு அதற்... ...லாக தஞ்சாவூர் ஜில்லாவில் ...க்குச் சொந்தமாகவுள்ள ... நிலத்தில் ...ருக்கு 5 ஏக்... 10-பேருக்கு நிலம் ... தாகச் சொன்னார்.

இதுவரை அதன்படி நடக்காது போகவே, கருப்புசாமி என்பவர், தஞ்சைக்கு போய்வர இதுவரை ரூ. 500 செலவு செய்திருக்கிறாராம். மந்திரியின் மவுனம் கண்டித்து அவர் கோவை காங்கிரஸ் கமிட்டி காரியாலயத்தின் முன் நேற்று முதல் பட்டினி இருந்து வருகிறார்.

லஞ்ச ஒழிப்புக்கு நடவடிக்கை

மந்திரிகள், உயர்தர அதிகாரிகளுக்கு விதிவிலக்கு!

கட்டாக், நவ. 16—

அதிகாரிகளிடையே லஞ்சப் பழக்கத்தை ஒழிப்பதற்காக அவர்கள் ஒவ்வொரு ஆண்டும் தங்களுக்குள்ள சொத்து, ஜங்கம சொத்துகளின் விவரங்களை சமர்ப்பிக்க வேண்டுமென்று ஒரிஸ்ஸா சர்க்கார் சுற்றறிக்கை விட்டிருக்கிறது.

இந்த சுற்றறிக்கை, மந்திரிகளையும், உயர்தர அதிகாரிகளையும் பாதிக்காதாம்! —கேபன்

நாட்டின் நலனிற்கு அதிகமாக உழையுங்கள்!

கெய்ரோ, நவ. 17—

நாட்டின் நலனிற்காக தினம் 5 நிமிஷம் அதிகமாக வேலை செய்யும்படி எகிப்து விமானப் படையினரை ஜனாதிபதி நெகுப் கேட்டுக் கொண்டிருக்கிறார். கட்டுப்பாட்டுடனும், ஒற்றுமையுடனும் இருக்க வேண்டியதின் அவசியத்தை அவர் வற்புறுத்தினார்.

ஆச்சாரியாருக்கு எச்சரிக்கை

★

கண்டனக் கணைகளைத் தொடுக்க வேண்டும்!

தோழர் அண்ணாதுரை உள்ளிட்ட தலைவர்கள் ஐவரும், இந்தத் திங்கள் (நவம்பர்) 30-ந்தேதி விடுதலையாவார்கள் என்பதும், அவர்களுக்கு நீதிமன்றம் அளித்தத் தண்டனை நாள் முழுவதையும் அனுபவித்த பிறகே வெளியே வருகிறார்கள் என்பதும் யாவரும் அறிந்ததே.

தலைவர்களைச் சிறையிலடைத்த பின், ஆச்சாரியார் சென்ற இடங்களிலெல்லாம், "தலைவர்களை விடுதலை செய்," என்று இடியென எழுந்த மக்கள் குரலைக் கேட்டு நடுக்கங்கொண்ட ஆச்சாரியார், கம்பிய குரலில, "நானா அவரைச் சிறைக்கனுப்பினேன்; நீதிதான் அவர்களைச் சிறைக்கனுப்பியது. நான் என்ன செய்வது?" என்றார். ஆனால், அவரே இன்று, அவராலும், மற்றவர்களாலும மதிக்கப்பட வேண்டிய நீதியை, தன் வேலைக்காரன் என்று நினைக்கிறார்!

நாம், அவருக்கு 'முதல் நெம்பர் எதிரிகள்' என்று அவர் சொன்னதை, நாம அவருக்குத் திருப்பிச் சொல்ல வேண்டிய கஷ்டத்தை நமக்கு அளிக்காமலே, அவரே, தமது அடாத செயல் மூலம் அதனை அறிவிக்கிறார்.

ஐம்பது ஆண்டுகளாக ஆராய்ந்து ஆராய்ந்து கண்டுபிடித்த அவருடைய சமுதாய அழிவுத் திட்டமான வர்ணாசிரம கல்வி முறையை எதிர்த்தோம்; அவர் வாழும் 'கோட்டை'யிலேயே பலர் எதிர்த்தார்கள்—ஏன்—'பொதுவாக நாங்களும் எதிர்க்கிறோம்,' என்று சொன்னதைப்போல், அண்மையில விருத்தாசலத்திலும், காங்கயத்திலும் நடந்த பொதுத் தேர்தல் நிரூபித்தது, காங்கிரஸ் முகத்திலும் கரிபூசிவிட்டது என்பதை அவர் மறக்க முடியாது.

இதன் பிறகாவது அவர் உண்மையான ஜனநாயகவாதியாக இருந்திருந்தால், திருந்தி, தன் தவறை ஒப்புக்கொண்டு அவரது இடத்தைக் காலிசெய்திருக்க வேண்டும்; அல்லது, திட்டத்தைக் கைவிட்டிருக்க வேண்டும். இரண்டையும் அவர் செய்யவில்லை—செய்ய மாட்டார்—வெளியிலே அவருக்கு எதிராக இருக்கும் சக்திகள், அவரை உணர வைக்கும் வரையில்!

ஆகவே, சாவின் ஓரத்திலே இருந்தவனும், மகிழ்வின் உச்சியிலே இருந்தவனும் பலமுறை இடம் மாறியிருக்கிறார்கள் என்ற சரித உண்மையை நாம் அவருக்குச் சுட்டிக்காட்டி, பிரதமரை, 'பெர்லின் நோக்கி நடக்க வேண்டாம்,' என்று எச்சரிக்கை செய்கிறோம். இந்தக் குரல், ஒரு லட்சம் குரல்களின் பிரதிநிதித்துவம் வாய்ந்தது என்பதையும் அவருக்கு அறிவிக்கிறோம்.

கட்சியின் வழக்குப் பலகையிலே நின்று கொண்டு, எடுத்ததற்கெல்லாம் ஆதரவை விந்தியத்திற்கு அப்பாலிருந்து எதிர்பார்த்துக் கொண்டு, கருப்புக் கொடிகளைக் கண்டு, கண்டனக் கணைகள் பலவற்றைத் தாங்கி, புதிய கலகங்களுக்கும், புதைந்துபோன பிரேதங்களின் கல்லறைகளுக்குக் காவலர்களாய் இருப்பவர்கள் யார் என்பதை அடையாளம் கண்டு கொள்ள, நீதிக்கு அதிக நாள் பிடிக்காது என்பதை அவர் இன்று அறியமறுக்கிறார் அதிகார போதையால்!

ஆச்சாரியார் எண்ணப்படி, தோழர் அண்ணாதுரை உள்ளிட்ட தலைவர்கள் ஐவரும் மீண்டும சிறைக்குள்ளேயே வாடநேர்ந்தால், 'திராவிடத்தின் நெஞ்சுறுதியைத் தாண்டிச் செல்லும் ஆற்றல் எதற்கும் இல்லை,' என்பதை வலியுறுத்திக் கூறவேண்டிய நிலைமைக்கு, நாம் அழைத்துச் செல்லப்பட்டவர்களாகிவிடுவோம்.

ஆகவே இதைக் கண்ணுறும் தோழர்கள், பொது மக்கள், நகர மன்றத் தலைவர்கள், உறுப்பினர்கள், சட்டசபை அங்கத்தினர்கள்—ஏன்—சாகடிக்க முடியாத ஜனநாயகத்தைச் சாகடிக்க முடியும் என்ற சர்வாதிகார மனப்போக்கை அதட்டி நிறுத்தும் ஆற்றலுடையோர் அனைவரும்—தங்கள் தங்கள் கண்டனத்தை ஆச்சாரியாருக்கு உடனடியாக அனுப்பி வைக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ.,
பொறுப்பாளர்,
தி. மு. கழகத் தலைமை நிலையம்.

ஐவர் சிறையில்!
இன்று
78-வது நாள்

நம் நாடு
தி. மு. க. தின இதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை . 17—11—1953 செவ்வாய்

'காரியத்தில் கண் வையடா!'

இந்தியத் துணைக்கண்டத்தின் முதல் அமைச்சர் ஜவகர் அறிவியல் பேசுகிறார்! விஞ்ஞானக் கண்ணோட்டம் வேண்டும் என்று விறுவிறுப்பாக விளம்புகிறார்!

சென்னை மாநில முதல் அமைச்சர் அன்பர் ஆச்சாரியார் ஆத்மார்த்தம் பேசுகிறார்! ஆஸ்திகம், ஆஸ்திகம் என்று எல்லா நேரத்திலும் அலறுகிறார்!

டெல்லியில் இருக்கிற சர்வாதிகாரி, நூறு ஆண்டு உலக முன்னேற்றத்தை, ஒரு பத்து ஆண்டுகளிலே அடைந்துவிட வேண்டுமென்று ஆவலாய்த் துடிக்கிறார். சென்னையில் இருக்கிற குட்டி சர்வாதிகாரி, இதுவரை ஏற்பட்ட மக்கள் விழிப்புணர்ச்சியை, தம் குறுகிய ஆட்சிக் காலத்திற்குள்ளாக 'லங்காதகனம்' செய்ய ஆத்திரப்படுகிறார்!

அவர் பெரியவர்! இவர் 'சோட்டா!' அந்தக் கூட்டத்திற்குள்ளாக உள்ள கருத்து, இது!

நேரு பண்டிதர், அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவர். அமைச்சர் ஆச்சாரியாரோ, இந்த மாநில காங்கிரஸ் கட்சியின் சிற்றம் கொண்டிருக்கும் 'சிறியவர்!'

காங்கிரசின் தலைவர், அறிவு என்கிறார்! இந்தக் குதர்க்கப் புத்தியினர், 'ஆத்ம அறிவு' என்கிறார்!

நாட்டு மக்கள், இருவர் சொற்களையும் செவிமடுக்கிறார்கள், முரண்பாடு கண்டு மிரளுகிறார்கள். எதை ஏற்பது, எதை உதறித்தள்ளுவது என்று விளங்காமல் விழிக்கிறார்கள். இதுதான் இன்றுள்ள சூழ்நிலை.

ஆத்மார்த்த அறிவு இங்கு தெருவெல்லாம் ஒருகாலத்தில் ஓடிக்கொண்டு இருந்ததாகத்தான் புராணங்கள் கூறுகின்றன! வடமொழி 'தரும' சாத்திரங்களும் சாதிக்கின்றன! இவ்வளவையும் 'பொதி சுமந்த பாத்திரம்' போல அமைச்சர் ஆச்சாரியார் போன்ற சில பலர், பல காலமாக சுமந்துகொண்டுதான் இருக்கிறார்கள்.

இந்த இயல்புகளைக் கொண்டிருந்த ஒரு [illegible] குலம். வந்தவர்களுக்கெல்லாம் வகை கெட்ட [illegible] வாட்டியாகக் கிடந்ததை, நாட்டு வரலாறு [illegible] போட்டுக் காட்டுகிறது. இதை மறுத்துக் [illegible] மனித ஜன்மங்களுக்கும் துணிவுமில்லை; போதிய [illegible] மில்லை. இது கண்ணுக்குத் தெரிந்த வெட்டவெளி [illegible] கண்ணாடி தேவைப்படாத விஷயம்!

'வைகுண்ட [illegible] போனவர்களின் எண்ணிக்கை இன்னும் கிடை[illegible]லை! 'வைகுண்டத்'தில் குடியேறி உள்ளவர்

முழுக் கணக்கு இயனிரவது கிடைக்கும் என்று நம்பிக்கை வைக்கவும் மார்க்கமில்லை! 'ரவுரவாதி நரகத்'தில் உள்ளவர்கள் தொகையை, எத்தர் கூட்டம், இன்றும் புள்ளி விவரம் காட்டிக் கூற முன்வரவில்லை!

நாம் என்னவோ, 'நரக' வேதனையில்தான், இந்த நல்லவர் ஆட்சியில் இருந்து வருகிறோம். கோடி கோடியான மக்கள் வாழ்க்கைச் சுமை தாங்காமல் கிளப்பும் கூக்குரல், 'வைகுண்டத்'துக்கும் கேட்கும்; 'கைலாய'த்துக்கும் கேட்கும்! ஆனால், அக்குரல், அமைச்சர் ஆச்சாரியார் காதிலும் புகவில்லை; டெல்லி சர்வாதிகாரியின் செவியிலும் நுழையவில்லை! இது பிரத்தியட்ச உண்மை!

வயிறு குளிர்ந்தால்தான், ஆத்மார்த்த அடுத்தப் பேச்சுக்குக்கூட வழி பிறக்கும். பசி அடங்கினால்தான், பொழுதுபோக்குக்காக வேதாந்தம், சித்தாந்தம் பேச மக்கள் முனைவர். பசி அனைவருக்கும் பொது. உயிர் வாழ்வன அனைத்துக்கும் இது பொது விதி.

இத்துறையில், நேரு பண்டிதரின் பேராசையின் பெட்டகமாக விளங்கும் ஐந்தாண்டுத் திட்டம், இரண்டரை ஆண்டுகளுக்குள்ளாக அபத்தப் பஞ்சாங்கமாகப் போய்விட்டது. உற்பத்தி அதிகம்—வேலையில்லாத் திண்டாட்டம் என்ற விபரீத விளைவுகளின் பிறப்பிடமாக ஐந்தாண்டுத் திட்டம் காட்சி அளித்தது. படுபள்ளத்தைப் பசசிலை போட்டு மறைப்பது போல, அந்த நட்டத்துக்கு 'கலர்' பூசியிருக்கிறார்கள் ஆளவந்தார்கள். பண்டிதரின் விஞ்ஞானக் கண்ணோட்டத்திற்குக் கண்ணாடி போட வேண்டியதாக இருக்கிறது, இமாலய வீழ்ச்சியை விளங்கிக்கொள்ள. பிறகு,

சர்வாதிகாரியின் விஞ்ஞானக் கண்ணோட்டம் வெறும் பொய்கைக் கண்ணோட்டமாகக் கிடக்கும்பொழுது, மேலும் பார்வையையே பிறவிக் குருடாக்க சென்னை எதேச்சாதிகாரி ஏமாற்றுப் பணி புரிகிறார்.

ஆத்மார்த்தத் தாலாட்டு பாடுகிறார் நமது எதேச்சாதிகாரி. அந்தத் தாலாட்டை, தரணிக்குத் தக்ருபமாகத் தந்து கொண்டு இருக்கிறது, ஜெமினி 'அவ்வையார்!'

'அவ்வையார்', ஒரு அபத்தக் களஞ்சியம்! அதில், மக்கள் பெற வேண்டிய ஆத்மார்த்த அறிவும் இல்லை; அறிவொளி நெறியும் இல்லை. அதில் இருப்பது விஞ்ஞானக் கருவிகளைக் கொண்டு எப்படிப் பொருளீட்டுவது என்பது தான்! மக்களிடத்திலே உள்ள பழமை மோகம், ஜெமினி வாசனின் வலை வீச்சுக்கு வற்றாததோர் ஆழ்கடலாக அமைந்துவிட்டது. இந்தப் படத் தயாரிப்பினாலே, வாசனின் அபாரத் திறமையும், கலை நுணுக்கமும் விளக்கமாகத் தெரிகிறது என்று, ஆரம்பம் முதல் இன்றுவரை வெளிச்சத்தைத் தேடித் திரியும் வினம்பர வாழாவெட்டிகள், வானளாவப் புகழ்கின்றன! பொரி மாலை பொக்கைவாயர்கள் மெச்சுவதில்லையா?

கல்யாண வீட்டிலேயே கண் கசக்குகிறவர்கள், எழவு வீட்டில் மாரடித்துக்கொண்டு ஒப்பாரி வைக்காமலா இருப்பார்கள்? ஐயோ பாவம்! அழுது தொலைக்கட்டும்! இரண்டொரு நாளைக்குத்தான் அவர்கள் பெயர் செய்தித்தாள்களில் அடிபடட்டுமே! இதில் யாருக்கு என்ன நஷ்டம்?

வாசனின் அவ்வையாரை புகழ்ந்து கூறும் இந்தத் திருமேனிகளுக்குக் குரல் நஷ்டம்; கொஞ்ச விளம்பர லாபம்! ஆனால் வாசனின் வளம் கூடுகிறது! பொது மக்களின் மடமை பெருகுகிறது!

நண்பர் கருணாநிதியின் 'பராசக்தி'யில் ஒரு பாட்டு; உடுமலை நாராயணகவியின் படைப்பு; நண்பர் ஜெயராமனின் இசை;

"ஆரியக் கூத்தாடினாலும்—காசு - காரியத்தில் கண் வையடா—தாண்டவக்கோனே!" என்பதாகும். வாசனின் இருதயத் துடிப்பை, இந்த 'ஸ்டெதாஸ்கோப்' கொண்டு பரிசோதித்துப் பாருங்கள்!

'அவ்வையார்' படத்துக்கு மட்டுமாவது 'காட்சி வரி'யைக் குறைக்க வேண்டும் என்றும், மத்திய சர்க்காரின் உதவித் தொகை தேவை என்றும் பேச்சு ஒலி கிளம்புகிறது. 'குடமா ஆடுமா, சோழியன் குடுமி?'

"ஆரியக் கூத்தாடினாலும்—'காசு—காரியத்தில் கண் வையடா' தாண்டவக்கோனே!" இதுதான் வாசனைப் பொறுத்தவரையில் 'அவ்வையார்' பெற்ற வெற்றியாகும்! மற்றவர்களுக்கு, தங்கள் இச்சை வாய்த்தனத்தின் மகத்தான வெற்றியாகும்!

"தென் இலங்கைத் தரணி தமிழ் வேந்தரின் குடையின்கீழ் இருந்தது ஒருகாலத்தில்"

'தமிழர் உரிமைக்குப் போராடத் தயார்' என்கிறார் அமைச்சர் கந்தையா

கொழும்பு நவ 15—

'ஒருகாலத்தில் இந்த தமிழ் மன்னர்கள் ஆட்சிபுரிந்திருக்கிறார்கள். இதை நமக்கு வரலாறு காட்டுகிறது. தமிழர்களுக்கு சுயமரியாதைதான் பெரிது. கண்ணியமிழந்து வாழ்வதைவிட தமிழர்கள் மடிவதுமேல்."

—இவ்வாறு, கொழும்பு தொழில் மந்திரி சர் கந்தையா வைத்தியநாதன், தமிழ்ச் சங்க 11-வது ஆண்டு விழாவைத் துவக்கிவைத்துப் பேசுகையில் கூறினார்.

மேலும், அவர் பேசியதாவது:-

"இலங்கை, எந்த ஒரு குறிப்பிட்ட ஜாதியா[illegible]டைய, அல்லது வகுப்பி[illegible]டைய தனிப்பட்ட பூர்வீக சாத்தல்ல; இங்கு வாழும் [illegible] ந்தர குடியினர் அனைவருக்கும் சொந்தமான [illegible] இலங்[illegible]."

"தமிழ் மொழிக்[illegible] மக்களுக்கோ ஆபத்து [illegible] ற்படுமானால் தமி[illegible]ழருடன் தோளுக்குத் தோ[illegible] நின்று போராடத் தயங்கமாட்டேன்," என்று [illegible]வர் உறுதி யளித்தார்.

"இலங்கையி[illegible] தற்போது சிங்களவர்கள் நம்பான்மையினராகவும், [illegible]ழர்கள் சிறுபான்மையின[illegible]ரகவும் இருக்கலாம்; ஆ[illegible]ல இங்குள்ள தமிழர்கள்தா[illegible] புராதனமானவர்கள் எ[illegible] பதை வரலாறே எடுத்து காட்டும். அந்த நாட்[illegible]ல் தமிழ்வேந்தர்கள்தா[illegible] இலங்கையில் செங்கோ[illegible] ச்சியிருக்கின்றனர். நான் [illegible]ப காலம் வரை சர்க்கார் [illegible]கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டியிருந்ததால், என் சொந்த அபிப்பிராயங்களைச் சொல்ல முடியாதிருந்தது. இப்போது அந்நிலை மாறிவிட்டது. தமிழர்கள் சுயமரியாதையை இழந்துவிடக் கூடாது. கண்ணியமிழந்து வாழ்வதைக் காட்டிலும் அழிந்து படுவது மேல். நாம் விழிப்புற்று, நமது கலாச்சாரத்தையும், மொழி, பண்பாடு ஆகியவற்றையும் பாதுகாக்காவிடில், நாம் ஒழிந்து விடுவோம் என்பது திண்ணம்" என்றார்.

சிக்கனத்தைக் கையாள சித்தூர் பள்ளிகள் மூடப்படும்

சித்தூர், நவ. 15—

செலவில் சிக்கனம் செய்யுமாறு சர்க்கார் பிறப்பித்துள்ள உத்தரவை கருதி சித்தூர் மாவட்டத்திலுள்ள 4 நடுத்தரப் பள்ளிகளையும், 5 உயர்தரப் பள்ளிகளையும் 1953-54-வது பள்ளிக்கூட ஆண்டிலிருந்து மூடிவிடுவதென ஜில்லா போர்டு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

திருப்பதியிலுள்ள முசாபரி பங்களாவை மூடுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

மத்திய சட்டசபை துவங்கியது

புதுடெல்லி, நவ 16—

மத்திய சட்டசபை இன்று கூடியது. இன்று அகதிகள் புனரமைப்பு நிதி நிர்வாக திருத்த மசோதா மீது விவாதம் அரைகுறையாக நடைபெற்றது.

அகதிகளுக்குக் கடன் வாங்குவதற்காக மசோதாவில் கண்டுள்ள நிதி வரம்பு ரூ 7 கோடியிலிருந்து 15 கோடியாக அதிகரிக்கப்படும் என்று உதவிநிதி அமைச்சர் ஏ. சி. குஹா தெரிவித்தார்.

கேள்வி நேரத்தின்போது சேத் கோவிந்ததாஸ் இந்தியில் கேட்ட கேள்விக்கு நேரு இந்தியிலேயே பதில் சொன்னார்.

பிறப்பு

செய்யாறு தோழர் டி. ஏ. ராமச்சந்திரன் மனைவியார் தோழியர் என். சரோஜினி அம்மையார், 5—11—53-ல் ஓர் ஆண் குழந்தைக்குத் தாயானார். அதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 வரப்பெற்றோம்-நன்றியுடையது--பொறுப்பாளர்.

ராசகோபாலாச்சாரியார் 'ஆண் அவ்வையாராம்!'

மேயரின் சி. ஆர். பக்தி!

சென்னை, நவ 17—

'அவ்வையார்' சினிமாப் படத்தைத் தயாரித்து வெளியிட்ட ஜெமினி அதிபர் எஸ். எஸ். வாசனைப் பாராட்ட, நேற்று மாலை சென்னையில் நடைபெற்ற வைபவத்திற்கு, மேயர் டி. செங்கல்வராயன் வரவேற்புக் குழுத் தலைவராக இருந்தார். அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"'அவ்வையார்' ஒரு மகத்தான சாதனை; மலையின் 'எவரெஸ்ட்' [illegible]கரம் போன்று 'அவ்வையார்' இருக்கிறது."

"நமது ராஜாஜி 'நவயுக ஆண் அவ்வையா'ராக விளங்குகிறார்."

சென்னையிலுள்ள ஆந்திர அலுவலகங்கள்

ஐதராபாத்திற்கு மாறலாம்!

பெங்களூர், நவ. 10—

ஆந்திராவின் தற்கால தலைநகர் விஷயத்தில் மாற்றம் ஏதுமிராதென்று, ஆந்திர முதல்வர் டி. பிரகாசம் கூறினார்.

இப்போது சென்னையில் வைக்கப்பட்டுள்ள ஆந்திர சர்க்கார் காரியாலயங்களையெல்லாம், ஐதராபாத்துக்கு மாற்ற சர்க்கார் யோசித்துவருவதாகவும் அவர் சொன்னார்.

சென்னையிலுள்ள காரியாலயங்களுக்காக ஆந்திர சர்க்கார் மாதம் ரூ. 15,000 வாடகை செலுத்தி வருகிறது. இதனால் செலவு அதிகமாகிறதென்ற காரணத்திற்காகத்தான் அலுவலகங்களை ஐதராபாத்திற்கு மாற்றுகிறோமே தவிர, ஐதராபாத்தின் மீது உரிமை பாராட்டியல்ல எனவும் அவர் கூறினார்.

திருப்பூர்—கருவம்பாளையம் திரு. வி. க. படிப்பகம்

4—11—53-ல், திருப்பூர் டவுன் கருவம்பாளையம் திரு. வி. க. படிப்பகத்தில், தோழர் கே. லெனின் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பல தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

கல்லக்குடி அறப்போர்

★

இன்று

127-வது நாள்

★

கல்லக்குடி அறப்போர் தலைவர் மு. கருணாநிதி, ம[illegible] பல தோழர்கள் சிறையில்.

★

இன்று

126-வது நாள்

“பலாத்காரத்தை கையாளுவது அரசியல் பேடித்தனம்”

எழும்பூர் ‘தூத்துக்குடி நாள்’

பொதுக்கூட்டத்தில் நாஞ்சில் கி. மனோகரன்

சென்னை, நவ. 16—

எழும்பூர் 32-வது வட்ட தி மு கழகச் சார்பில் தோழர் கோ. இளவரசு தலைமையில் ‘தூத்துக்குடி நாள்’ பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் இளஞ்சேரலாதன், நடிகமணி டி. வி. நாராயணசாமி, ஆகியோர் பேசியபின் நாஞ்சில் கி மனோகரன் பேசும்போது குறிப்பிட்டதாவது :—

“ஒரு கட்சி, தன் கருத்தை பொதுமக்களிடையே வைப்பதற்கு பலாத்காரம் தேவையில்லை. அப்படி அந்தத் துணையுடன் வைத்துப் பேசினால், அரசியலிலும் பேடித்தனம் புகுந்துவிட்டது என்றுதான் அர்த்தம். இத்தகு நிலையில்தான் இன்று ஆச்சாரியாரும் அவரைச் சார்ந்துள்ள சீடகோடிகளும், அவர் கட்சியும் உள்ளது. நம், தி மு கழகத் தோழர்கள் நமது பொதுச் செயலாளரின் வேண்டுகோளுக்கும் அறிக்கைக்கும் அடங்கித்தான் இப்பொழுது அமைதியாக நடக்கின்றார்களே யன்றி எதிரியினுடைய பலாத்காரத்திற்குப் பயந்து கோழையாகி விட்டதால் அல்ல; தனது ஆட்சியைப் பலப்படுத்தவும், தி. மு. கழக உருவில் வளர்ந்துவரும் மக்கள் சக்தியை உடைக்கவும் இப்பொழுது ஆச்சாரியாருக்கு பலாத்காரம் தேவையாயிருக்கிறது. இதை வளர்க்க பல சங்கங்கள் தேவையாயிருக்கிறது. அத்தகையவற்றில் ஒன்றுதான் இளைஞர் காங்கிரஸ். எனவே, அது பலாத்காரத்தில் இறங்கினால், நாம் பயந்துவிடக் கூடாது. பொதுச் செயலாளரின் ஆணைக்குக்கட்டுப்பட்டு, நாம், சற்று ஒதுங்கியிருக்க வேண்டும்.

நாம் ஆச்சாரியாருக்கு எதிராக வெளியில் கருப்புக்கொடி தூக்கினோம். இப்பொழுது அவரை எதிர்த்து அவர் கட்சி உள்ளேயும் செங்கொடி தூக்கப்பட்டு விட்டது. இதன் முடிவை நாம் சற்று பொறுத்திருந்து நிதானமாகக் கவனிக்க வேண்டும்.”

தூத்துக்குடி நிதிக்காக உண்டியல் மூலம் ரூ 10—7—9 வசூலாயிற்று.

தியாகராயர் பகுத்தறிவு மன்றம்

சென்னை, நவ. 16—

வண்ணையம்பதி, தியாகராயர் பகுத்தறிவு மன்றச் சார்பில் 13—11—53-ல் நடைபெற்ற சொற் பயிற்சிக் கூட்டத்தில், மி ஜெகநாத அய்யா தலைமையில் ‘நிலையும், நினைப்பும்’ என்ற பொருள் பற்றி, தோழர்கள் டி எம். எஸ் மணி, சிவாஜி இராஜயவேலு வேலுசாமி, மன்றச் செயலாளர், கணேசன் மற்றும் பலர் சொற்பொழிவாற்றினர்.

நாடு கடத்தப்படுவோர் ?

லண்டன், நவ. 17—

பிரிட்டிஷ் கயானா முன்னாள் பிரதமர், டாக்டர் ஜகன் மனைவி பிரிட்டிஷ் கயானாவிலேயே இருக்கிறார் இவரை நாடு கடத்த உத்தரவிடப்படலாமென பலத்த வதந்தி நிலவுகிறது. ஆனால், அதிகார வட்டாரங்களில் இதைப்பற்றி ஏதும் சொல்லமறுக்கின்றனர்.

யுவர்களுக்கு எச்சரிக்கை!

கெய்ரோ, நவ. 16—

வீதியில் செல்லும் பெண்களைக் கண்டு சீட்டியடிப்பது, அவர்கள் மீது மோதிக்கொண்டு போவது போன்ற நடத்தைக்கு ஒரு ஆண்டு சிறைவாசம் அளிக்கக் கூடிய சட்டம் எகிப்தில் சீக்கிரமே கொண்டுவரப்படவிருக்கிறது. எகிப்திய யுவர்கள் சிலரின் போக்கே இதற்குக் காரணம்!

லால்குடி மு.சி. விருத்தாசலம் காலமானார்

லால்குடி, நவ. 16—

‘நம் நாடு’ பொறுப்பாளர் தோழர் அ. பொன்னம்பலனார் அவர்களின் சிறிய தாயார் மகன் தோழர் மு. சி. விருத்தாசலம் அவர்கள் நேற்றிரவு 11-30 மணிக்கு இயற்கை யெய்திவிட்டார். தோழர் விருத்தாசலம், லால்குடியில் மளிகை வியாபாரம் செய்து வந்தவர்; பஞ்சாயத்து போர்டு உறுப்பினராக இருந்து பெரும் பணியாற்றி வந்தார்.

லால்குடி தி. மு கழக மாநாட்டின் போது, பொதுச் செயலாளர் அண்ணாதுரை உட்பட கழக முக்கியஸ்தர்களுக்கு நல்ல முறையில் விருந்து உபசாரம் நடத்தினார்.

தோழர் விருத்தாசலத்திற்கு வயது 45. அவருக்கு ஒரு ஆண் குழந்தையும், மூன்று பெண் குழந்தையும் இருக்கின்றன. அவர் பிரிவு அவரது குடும்பத்தாருக்கு ஈடு செய்ய முடியாத நஷ்டமாகும்.

தோழர் விருத்தாசலத்தின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தாருக்கும், நண்பர்களுக்கும் நமது ஆழ்ந்த அனுதாபம் உரித்தாகுக.

—(ஆ—ர்)

டிரான்ஸ்வால் இந்திய காங்கிரசு தலைவர் காலமானார்

ஜோகன்ஸ்பர்க், நவ. 15—

நேற்றிரவு ஜோகன்ஸ்பர்க்கில் மகாத்மா காந்தியின் ‘தத்துப் புதல்வரான’ டி. என். நாயுடு 51-வது வயதில் தமது இல்லத்தில் காலமானார். டி. என். நாயுடு டிரான்சுவால் இந்தியர் காங்கிரசு துணைத் தலைவராவார்.

நிமிஷத்திற்கு ஒன்றாக விற்கும் புத்தகம்!

லண்டன், நவ 17—

எவரஸ்ட் பற்றி எழுதியுள்ள புத்தகத்திற்கு நல்ல கிராக்கி இருக்கிறது. பிரசுரிக்கப்பட்ட தினம் நிமிஷத்திற்கு ஒரு புத்தகம் வீதம் விற்றிருக்கிறது அயல் நாடுகளுக்கும், இந்தியாவுக்கும் புத்தகத்தை அனுப்ப ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. இதுவரை சுமார் லட்சம் பிரதிகளுக்கு ஆர்டர் முன்கூட்டியே வந்திருப்பதாக பிரசுரகர்த்தர்கள் கூறுகின்றனர்.

தனலட்சுமியின் புரட்டுக்கு ‘தினமணி’யின் சப்பைக்கட்டு!

‘சிரமந்தானும்!’ ‘இருந்தாலும்,’ என்று பேசும் பித்தலாட்டம்!

“டாக்டர்கள் ஏதாவது மருந்தைக் கொடுத்து ஆஸ்பத்திரியில் கடும் பசியைக் கிளறிவிட்டதாகவும் தெரியவில்லை. பெண்ணும் உறவினர்களும் சொல்வது உண்மை என்று ஒப்புக் கொள்வது இந்த சூழ்நிலையில் சிரமம்தான்.”

“டாக்டர்களுடைய அறிக்கை இந்த விவகாரத்திற்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டதாக இன்னும் நிச்சயமாக சொல்வதற்கில்லை.”

“விஞ்ஞான அறிவுக்கு எட்டாத மர்மம் எதுவும் இல்லை யென முசுவாகிவிட்டதாக தனலட்சுமி விவகாரத்தில் இறுதியாக முடிவுகட்டிவிடுவது சாத்தியமல்ல.”

—இவ்வாறு, ‘தினமணி,’ நவ. 15-ம் தேதி யன்று, துணைத் தலையங்கம் தீட்டியிருக்கிறது.

நங்கையோ அற்புதம் புரிபவர்! சோதரனோ ஆத்திரப்படுபவர்!

எத்தனம் சித்தும் சந்தி சிரிக்கிறது!

புதுடெல்லி, நவ 16—

தனலட்சுமி இன்று காலை பங்களூர் விக்டோரியா ஆஸ்பத்திரியிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

ஆஸ்பத்திரி டாக்டர் பி. கிருஷ்ணன் ‘நல்ல பெண்ணாக இரும்மா’ என்று புத்திமதி கூறி அனுப்பினார்.

தோழி தனலட்சுமி பரிசோதனைக்காக 36 நாட்கள் ஆஸ்பத்திரியில் இருந்திருக்கிறார்.

தனலட்சுமி நிருபர்களிடம் பேசுகையில், தான் போதுமான சாப்பிட முடிகிறது என்பதற்கு மகிழ்வதாகக் கூறினார்.

முன்னைக் காட்டிலும் தனலட்சுமி தற்போது ஆரோக்கியமாக இருக்கிறார்.

தனலட்சுமியின் சகோதரர் தோழர் நன்னையா விடுத்துள்ள அறிக்கையில், டாக்டர்களின் முடிவு சரியா, தப்பா என்பது பற்றி தான் ஏதும் சொல்வதற்கில்லை யென்றும், தனது தங்கை விஷயத்தில் ஏமாற்று வித்தை எதுவும் இல்லையென்றும், தனலட்சுமிக்கும் அவரது குடும்பத்தாருக்கும் இந்த மர்மத்தை அறிந்துகொள்ள வேண்டுமென்ற எண்ணத்தால்தான் தனலட்சுமியை ஆஸ்பத்திரிக்குள் நுழைத்தோம் என்றும், தன்னிடம் ஏதோ அதிசயம் இருப்பதாக தனலட்சுமி கூறிக் கொள்ளவில்லை என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அது எழுதியிருப்பதாவது :—

குடகின் ‘அதிசயப் பெண்’ தனலட்சுமியைப் பற்றிய பரபரப்பான கதை உண்மையாக இருக்க முடியாது என்று பெங்களூர் டாக்டர்கள், மூன்று வாரப் பரிட்சைக்குப் பின், அறிவித்துவிட்டனர். ஆஸ்பத்திரியில் பரிசோதனைக்கு வந்த இரண்டு நாளிலேயே உணவின்றி அப்பெண் வாட்டமுற்று எடை குறைந்ததாகவும், பிறகு அவளே கேட்டு அன்னமுண்டதாகவும், அது முதல் மற்றவர்களைப் போலவே சாப்பிட்டு ஆகாரத்தை ஜீரணித்துக் கொள்வதாகவும், பிரதான டாக்டர் அறிவிக்கிறார். ஆகாரம் உட்கொள்ளவில்லை என்று சொல்லப்பட்ட காலங்களில் இரகசியமாக தனலட்சுமி சாப்பிட்டுத்தான் இருக்க வேண்டும் என்பது அவருடைய துணிபு. ஆனால், சென்ற 18 மாதமாக, தான் சாப்பிட்டதே இல்லை என்று அந்தப் பெண் சாதிக்கிறாள்; பெற்றோர்களும் அதை ஊர்ஜிதம் செய்கிறார்கள். சாப்பிட மறுத்தால் நடந்ததுண்டு ஆனால் எல்லாம் வதந்தியாகிவிடுவது சகஜம் என்று அப்பெண்ணின் சகோதரர் கூறுகிறார்.

ஆனாலும் ஆஸ்பத்திரியிலிருந்து விடுபட்டு வந்த பிறகு, தொடர்ந்து சரிவர சாப்பிடுகிறாளா என்பது கவனிக்க வேண்டிய விஷயம். அப்பெண் பெங்களூரிலே இருந்துகொண்டு நர்ஸ் வேலைக்குப் படிக்க விரும்புவதாகக் கூறப்படுகிறது. இதற்குத் துணை புரிவதன் மூலம், மேற்கொண்டு அப்பெண்ணின் போக்கையும் வளர்ச்சியையும் தொடர்ந்து கவனிக்க வழி ஏற்படலாம். 18 மாத காலம் குடும்பத்தினர் வேண்டுமென்றே அவளைப் பற்றி வெளிச்சம் போட்டனர் என்பதற்கு ஆதாரம் தேவை. இதனால் அவர்கள் எந்த லாபமும் அடைந்ததாகத் தெரியவில்லை. அறிஞர்களும், நிபுணர்களும் சென்று பார்த்தனர். ஒரு ஹைகோர்ட் நீதிபதி நேரில் கண்டு பேசி, சங்கோபாங்கமாக விசாரித்து, பரிபூரண கதையை நம்பி நீண்ட அறிக்கையை வெளியிட்டது ஞாபகமிருக்கலாம். பரியா நிலை, விட்டு விட்டு வருகிறதா என்பது தெரியவில்லை.

மேற்கொண்டு கவனித்து வந்தால் தான் உண்மை நிலை புலப்படும். பெங்களூர் டாக்டர்களின் அறிக்கைக்குப் பிறகு, வட இந்தியாவில் இதேமாதிரி அதிசயப் பிறவிகளாகக் கருதப்படும் இரண்டு பேரைப் பற்றி சந்தேகங்கள் ஏற்படத்தான் செய்யும்.

நாட்டு மொழி வீட்டு மொழியை அழிப்பது பேதாதாம்!

தமிழ் எழுத்துக்களையும் இந்தி வண்களுளர் வம்பு!

லக்னோ, நவ. 15—

இந்தியாவிலுள்ள எல்லா மொழிகளுக்கும், இந்தி எழுத்தையே உபயோகிப்பதுபற்றி இந்தியாவிலுள்ள எல்லா ராஜ்ய முதன் மந்திரிகளும், கல்வி இலாகா மந்திரிகளும் இங்கு இம்மாதம் 28-ம் தேதி கூடி விவாதிப்பார்கள். இம்மாநாடு இருதினங்களுக்கு நடைபெறும்.

இம்மாநாட்டிற்கு இந்திய துணைத் தலைவர் எஸ். ராதாகிருஷ்ணன் தலைமை தாங்குவார். உத்தரப் பிரதேச கவர்னர் கே எம். முன்ஷி திறந்துவைப்பார்.

கைத்தறி தொழிலில் மந்த நிலைமை!

ஒரு கோடி நெசவாளர்கள் பாதிக்கப்பட்டனர்

பம்பாய், நவ. 15—

கைத்தறித் தொழிலில் மந்த நிலை ஏற்பட்டதுகாரணமாக ஒரு கோடி நெசவாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அகில இந்திய கைத்தறி நெசவாளர் மாநாட்டுத் தலைவர் என். ஜி ரங்கா அறிவித்தார்.

நெசவாளர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க கைத்தறி துணிகளுக்கு அயல்நாட்டு மார்க்கெட்டுகள் கிடைக்க இந்திய சர்க்கார் வழி செய்ய வேண்டும் என்றும், இருக்கும் கைத்தறி ஜவுளி ஸ்டாக்குகளை எல்லாம் இந்திய சர்க்கார் வாங்கி, குறைந்த விலைக்கு ஏழைகளுக்கு விற்க வேண்டும் என்று அவர் கூறினார்.

‘பிரதிக்ஞை’யை அனுமதிக்கக்கூடாதென சர்க்கார் பிரதிக்ஞை!

சென்னை, நவ 14—

ரோகிணி பிக்சர்ஸால் தயாரிக்கப்பட்ட 18,000 அடி நீளமுள்ள ‘பிரதிக்ஞை’ என்ற தெலுங்குப் படம் பொதுஜனங்களுக்குக் காட்டப்படுவதற்கு உகந்ததல்லவென்று, பிலிம் தணிக்கை போர்டு அக். 23-ம் தேதி அன்று அதற்கு ‘சர்டிபிகேட்’ வழங்க மறுத்துவிட்டது. இந்த விபரம் நவம்பர் 7-ம் தேதி வெளியான இந்திய சர்க்கார் கெஜட்டில் வெளியிடப்பட்டிருக்கிறது.

தூளை தி. மு. கழக தோழர்கள் விடுதலை

சென்னை, நவ 16—

2—10—53 அன்று குளையில் கல்யாணமெண்திரி தோட்டத்தில் வசிக்கும் மக்கள், பண்டித நேரு சென்னை வந்தபோது கருப்புக் கொடி நிகழ்ச்சியில் பங்கேற்றவர்கள் என்ற காரணத்திற்காக அவர்களின் குடிசைகளுக்குத் தீயிடப்போவதாக அறிக்கையிட்டிருந்தனர். இதையறிந்த தோழர்கள் பலர், அந்த வட்டார காங்கிரஸ் கழக உறுப்பினரிடம் முறையிடச் செல்லுகையில் தாக்கப்பட்டும் அவர்கள் மீது வழக்கும் தொடரப்பட்டிருந்தது

அந்த வழக்கை விசாரித்த சென்னை 7-வது மாகாண மாஜிஸ்திரேட் இன்று எல்லோரையும் விடுதலை செய்தார். 17-வது வட்ட செயலாளர் அர்களும், அப்பகுதி கிராம தலைவரும் 23—10—1953-ம் தேதியே நிரபராதிகளென தீர்ப்பளிக்கப்பட்டுவிட்டது.

கழகத் தோழர்களின் சார்பாக வழக்கறிஞர் சி. பார்த்தசாரதி ஆஜரானார்.

* * *

நன்றியும் — நன்கொடையும்

“2—10—53ல் குளையிலுள்ள காங்கிரஸ் இளைஞர் முன்னணிக் காலிகள், எங்கள் கிராம மக்கள் மீது காங்கிரஸ் அவர்களைத் தாக்கியதாக தொடரப்பட்ட வழக்கிற்காக குளை தி. மு கழகம் எங்களுக்காக வழக்கறிஞர் முதலிய உதவிகளைத் தந்து, 16—11—53 அன்று எங்களை நிரபராதிகளென நிரூபித்தமைக்கு எங்களின் மனமார்ந்த நன்றியை அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்” என கல்யாணமெண்திரி தோட்ட தலைவர் தோழர் குட்டியப்பன் தெரிவித்துக் கொள்கிறார். ‘நம் நாடு’ வளர்ச்சிக்கு ரூ 1 நன்கொடை அளிக்கப்பட்டது.

தமிழகமெங்கும் 'தூத்துக்குடி வாரம்'

✮

தி. மு. கழகத் தலைமை நிலைய அறிக்கைக்கிணங்க, 'தூத்துக்குடி வாரம்' கொண்டாடி, அந்தக் கூட்டத்தில், "தூத்துக்குடி வழக்கை வாபஸ் வாங்கக் கோரியும், அதில் சம்பந்தப்பட்டுள்ள தூத்துக்குடி தோழர்களை விடுதலை செய்யுமாறு சென்னைப் பிரதம மந்திரியைக் கேட்டுக்கொண்டு தீர்மானம் நிறைவேற்றி, அதை சென்னை முதல் அமைச்சர் ஆச்சாரியாருக்கு அனுப்பியும், தூத்துக்குடி சதி வழக்கை வாபஸ் பெற்று; தூத்துக்குடி தோழர்களை விடுவிக்கக்கோரும் மனு ஒன்றை தயாரித்து, அதில் பொதுமக்களிடம் கையொப்பம் வாங்கி முதலமைச்சருக்கு அனுப்பி"யும் உள்ள கழகங்களின் பட்டியலும், நிகழ்ச்சியின் சுருக்கமும் கீழே தரப்பட்டுள்ளது. தீர்மானங்களும், கோரிக்கையும், கையொப்பத் தாளும் ஒரே நிகழ்ச்சியில் சம்பந்தப்பட்டவையாதலால், தீர்மானங்களைத் தவிர்த்து, கூட்ட நிகழ்ச்சிகளை மட்டும் பிரசுரித்துள்ளோம்.

எலந்தங்குடி

7—11—53ல், கழகத் திடலில் எம். [illegible] அவர்கள் தலைமையில் தூத்துக்குடி நாள் கூட்டம் நடைபெற்றது. தோழர் கங்காதரன் இயக்கப் பண் பாடினார். தோழர்கள் மாயவரம் வி. எ. பாலையன், டாக்டர் எம். எஸ். ராஜன் ஆகியோர் பேசினர்.

மேலூர்

6—11—53ல், தோழர் கே. பி. பாண்டியன் தலைமையில், தி. மு. கழகச் சார்பில், தூத்துக்குடி நாள் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதுபோது, தோழர்கள் அய்யாசாமி, எஸ். முத்து, எஸ். ஞானப்பிரகாசம் என். எஸ். இராஜேந்திரன் ஆகியோர் தூத்துக்குடி நிகழ்ச்சி பற்றியும், தி. மு. கழகப் போராட்டங்களை விளக்கியும், புதிய கல்வித் திட்டத்தைக் கண்டித்தும் சொற்பொழிவாற்றினர்.

அனகாபுத்தூர்

8—11—53ல், (பல்லாவரம் அருகில்) அனகாபுத்தூர் தி. மு. கழகச்சார்பில் தூத்துக்குடி நாள் கொண்டாடப்பட்டது. அன்று மாலை கழகத் தோழர்களும், பொதுமக்களும் குழு, ஊர்வலம் முக்கிய வீதிகளில் வந்து மாலை 6 மணிக்கு அம்மன் கோயில் அருகில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர் ஆர். [illegible] மணி தலைமை வகித்தார். தோழர்கள் டி. எம். [illegible], சி. ராமலிங்கம், [illegible] அருணாவுக்கரசு [illegible] அக்குடி [illegible] கழக [illegible] பற்றியும் [illegible] பேசினர்.

அரியலூர்

7—11—53ல், தி மு கழகச் சார்பில், தூத்துக்குடி நாள் கூட்டம் கே. சிவப்பெருமான் தலைமையில் நடைபெற்றது. அதுபோது, சேலம் சிற்றரசு சுப்பிரமணியம் அவர்கள் ஆழ்வினை [illegible] 'பகுத்தறிவு கலைச் சிந்தனை' [illegible] நடத்தப்பட்டது.

கூட்டத்தில், தூத்துக்குடி நிதிக்கு 17—9—11 உண்டியல் மூலம் வசூலாயிற்று.

பட்டிவீரன்பட்டி

8—11—53ல், தூத்துக்குடி [illegible] கூட்டம் கூடியது. அதுபோது தூத்துக்குடி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

துறையூர்

7—11—53ல் [illegible] பிள்ளையார் கோயில் முன்பு, தோழர் [illegible] அழகுமுத்து தலைமையில் தூத்துக்குடி வாரப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழியர் அருள்மொழி, டி. என். பூங்கோதை ஆகியோர் பேசினர்.

பட்டுக்கோட்டை

8—11—53-ல், நகர தி. மு. கழகக் கமிட்டி கூட்டம், தோழர் என். சங்கரன், சோடா கம்பெனியில், தோழர் கே. மாணிக்கம் தலைமையில் கூடியது. அதுசமயம் தூத்துக்குடி நாள் பற்றிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தியாகதுருகம்

7—11—53-ல், தி. மு. கழகச் சார்பில், தூத்துக்குடி நாள் கூட்டம் நடத்தப்பெற்றது. அதுபோது, தூத்துக்குடி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கீழ்விசாரம்

4—11—53-ல், தி. மு. கழக உறுப்பினர் கூட்டத்தில், தூத்துக்குடி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திருவானைக்காவல்

8—11—53-ல், தி. மு. கழகச் சார்பில், பச்சையம்மன் திடலில் தூத்துக்குடி நாள் பொதுக்கூட்டம் தோழர் என். மருதநாயகம் தலைமையில் நடைபெற்றது. அதுபோது, தோழர்கள்: எம். எஸ். முத்து, கல்யாணன், பி. விஸ்வநாதன், என். விஸ்வலிங்கம், இரா. நமசிவாயம், சோலாதன், எம். துரைசாமி ஆகியோர் பேசினர்.

சாத்தூர்

8—11—53-ல், தி. மு. கழக சார்பில், 'தூத்துக்குடி [illegible]' கூட்டம் தோழர் சி. [illegible] பொன்னையா தலைமையில், சுப்பிரமணிய [illegible] நடை[illegible] தோழர்கள்: [illegible], ஆர். பி. சண்முகம் [illegible] ஆகியோர் பேசினர்.

[illegible]க்கோணம்

7—11—53-ல், தூத்துக்குடி நாள் பொதுக்கூட்டம் தோழர் [illegible] ஆர். ராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள்: என். ஜே. [illegible] சாமி, வி. டி. சாமி, பெருந்தேவனார், என். கோவிந்தராசன் ஆகியோர் பேசினர்.

[illegible]ங்களூர்

7—11—53ல், தி. மு. கழகச் சார்பில் தூத்துக்குடி தினக் கூட்டம் தோழர் ப. செல்வராசன் தலைமையில் நடைபெற்றது. அதுபோது, தோழர்கள் வெங்கடேசன், கி. சோழன், மு. சிவேது, வேலாசு, வே. இளஞ்செழியன் ஆகியோர் பேசினர். தூத்துக்குடி வழக்கு நிதிக்காக கூட்டத்தில் உண்டியல் மூலம் 3—10—9 வசூல் ஆயிற்று.

[illegible]த்துவாச்சாரி

7—11—53ல், தி மு கழகச் சார்பில் தூத்துக்குடி நாள் பொதுக் கூட்டம் தோழர் வி ஆர். ஆதிமூலம் தலைமையில் நடைபெற்றது. அதுபோது, தோழர்கள் க. நெடுஞ்செழியன், பாண்டியன், இளஞ்செழியன், இராசகோபால் ஆகியோர் பேசினர்.

ஆலவாய்மொழி

6—11—53ல், தி. மு. கழகச் சார்பில் தோழர் எஸ். சண்முகம் தலைமையில், தூத்துக்குடி நாள் கொண்டாடப்பட்டது. தோழர்கள் முகமது அலி, என். செல்வராஜன் ஆகியோர் பேசினர்.

ஆம்பூர் (வ. ஆ.)

8—11—53ல், கழகக் கட்டடத்தில் தோழர் எ. ஜி. சாமி தலைமையில் தூத்துக்குடி நாள் நடைபெற்றது. தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திண்டுக்கல்

8—11—53ல், தி. மு. கழகச் சார்பில், வ. உ. சி. திடலில், தோழர் எல் வீராசன் தலைமையில் தூத்துக்குடி நாள் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அதுபோது, தோழர்கள் கே. மதிவாணன், எம். ஜெப்போலியன், எ. ராசு, எஸ். முத்து, மதுரை எஸ் முத்து ஆகியோர் பேசினர்.

பொள்ளாச்சி

8—11—53ல், தேர் நிலை வெளியில் தி. மு. கழகச் சார்பில் தூத்துக்குடி நாள் பொதுக் கூட்டம் தோழர் அ. ச. பாலு தலைமையில் நடைபெற்றது. அதுபோது தோழர்கள் சி. [illegible] பாலனி, சி. என். அரசு, ஆ. [illegible] கார் ஆகியோர் 'தூத்துக்குடி நாள்' என்பது குறித்துப் பேசினர்.

குள்ளம்பட்டி

8—11—53ல் தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம் [illegible] கிரிப்பாறையில் தோழர் கந்தசாமி தலைமையில் நடைபெற்றது. அதுபோது, தூத்துக்குடி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

சோழமாதேவி

8—11—5[illegible]ல், தி. மு. கழகச் சார்பில் தூத்துக்குடி நாள் பொதுக்கூட்டம், செயலாளர் எஸ். எஸ். [illegible] தலைமையில் நடைபெற்றது. தலைவர் முன்னுரைக்குப் பின் தோழர்கள் சுந்தரம், எஸ். எம். காதர், துரைராசு ஆகியோர் பேசினர்.

வெங்கடாசலபுரம்

1[illegible]—11—53ல், இவ்வூர் தி. மு. கழகத்தின் சார்பில், தூத்துக்குடி [illegible] ஒட்டிய விண்ணப்பத்தில், பொதுமக்களின் கையொப்பம் பெற்று, அரசியலாருக்கு அனுப்பப்பட்டுள்ளது என்று, செயலாளர் தோழர் வெ. க. செல்வராசன் எழுதுகிறார்.

நாகூர்

8—11—53ல், [illegible] பள்ளிக்கூட கழகக் கட்டடத்தில் தோழர் எஸ். வி. சுபாபதி தலைமையில் தூத்துக்குடி நாள் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் எஸ். எம். எஸ். ராசன், இ. எஸ். மூமினா, என். மாரியப்பன், நாகை நகரமன்ற உறுப்பினர் ஜி. ராஜமாணிக்கம் ஆகியோர் பேசினர்.

தாராவி—பம்பாய்

6—11—53ல், சந்திரகாந்தியின், நெ. 3 இல்லத்தில், தூத்துக்குடி வாரம் தோழர் எல். என். செல்லச்செழியன் தலைமையில் நடைபெற்றது. அதுபோது தோழர்கள் காஞ்சி இராசமாணிக்கம், இரா. இரத்தினசாமி, வடவைக்குரல் பன்னீர்ஐயா ஆகியோர் பேசினர்.

உடுமலைப்பேட்டை

8—11—53ல், தூத்துக்குடி நாள் பொதுக்கூட்டம் தோழர் இரா. கி. மயில்சாமி தலைமையில் நடைபெற்றது. தோழர் ப. நாராயணன், தோழியர்கள் பூங்கோதை, அருள்மொழி பேசினர்.

வீரவநல்லூர்

7—11—53ல், தி. மு. கழகச் சார்பில் தூத்துக்குடி நாள் பொதுக் கூட்டம் தோழர் சின்ன கந்தசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர் மதுரை எம். ஆர். கணேசன் பேசினார்.

போத்தனூர்

8—11—53ல், தி. மு. கழக சார்பில், தூத்துக்குடி நாள் பொதுக் கூட்டம் தோழர் ப. கணேசன் தலைமையில் நடைபெற்றது. தோழர் இரா. சண்முகம் விளக்கவுரை ஆற்றினார்.

புதுவை

தூத்துக்குடி தோழர்கள் மீதுள்ள வழக்கை வாபஸ் வாங்கி, அவர்களை விடுதலை செய்யுமாறு சென்னை முதல் மந்திரிக்கு மகஜர் ஒன்று தயாரித்து, அதில் புதுவை இயக்கத் தோழர்கள் 60 பேர் கையொப்பமிட்டு, பதிவுத் தபால் மூலம் ஆச்சாரியார் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

சேவூர்

7—11—53ல் தர்மராஜா கோவில் மைதானத்தில், போளூர் சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் தூத்துக்குடி நாள் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அதுபோது, தோழர்கள் டி. எத்திராசன், ஆ. ப. [illegible]சன், கே. டி. குப்புசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

லால்பேட்டை

தி. மு. கழக சார்பில், செயலாளர் தோழர் லா. க. இராமலிங்கம் அவர்கள், சென்னை முதலமைச்சருக்கு, தூத்துக்குடி பற்றிய தீர்மான நிகழ்ச்சிகளை அனுப்பியுள்ளார்.

ஆயக்குடி

8—11—53ல், தி. மு. கழகச் செயற்குழு கூட்டம் தோழர் ப. சண்முகம் தலைமையில் நடைபெற்றது. அதுபோது, தூத்துக்குடி நாள் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

குரும்பூர்

8—11—53ல், தி. மு. கழகச் செயற்குழு கூட்டம், தோழர் எஸ். எஸ். மணியன் தலைமையில் நடைபெற்றது. அதுபோது, தூத்துக்குடி நாள் தீர்மானங்கள் நிறைவேறின.

அக்கிப்பேட்டை

8—11—53ல், தி. மு. கழகச் சார்பில், தூத்துக்குடி நாள் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அதுபோது, தூத்துக்குடி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பாளையங்கோட்டை

8—11—53ல், தி. மு. கழகச் சார்பில் தூத்துக்குடி தினம் மார்க்கெட் மைதானத்தில் நடைபெற்றது. அதுசமயம், தோழர்கள் அலி சேக் மன்சூர், கடவுள் தலைவன், கிருஷ்ணன் ஆகியோர் பேசினர்.

அண்ணாமலை நகர்

1—11—53ல், தி. மா. மு. கழகச் செயற் குழு கூட்டம் செயலாளர் தலைமையில் நடைபெற்றது. அதுபோது, தூத்துக்குடி நாள் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பத்தமடை

8—11—53ல், தி. மு. கழகச் செயற் குழுக் கூட்டம் தோழர் பி. பரமசிவம் தலைமையில் நடைபெற்றது. அதுபோது, தூத்துக்குடி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஆற்காடு

10—11—53ல், தி. மு. கழகச் செயற் குழு கூட்டம் தோழர் ஆர். இராசதுரை தலைமையில் நடைபெற்றது. அதுபோது, தோழர்கள் க. ஜகதீசன், சே. வில்வம் ஆகியோர் பேசினர்.

நெல்லை தி. மா. மு. கழகத் தேர்தல்

நெல்லை மாணவர் முன்னேற்றக் கழகப் புதிய தேர்தல் வருகிற ஞாயிறன்று (22—11—53) மாலை 4 மணிக்கு, மாவட்டச் செயலாளர் வீரபாகு அவர்கள் தலைமையில் நடைபெறும்.

சொற்பயிற்சி மன்றம்

அரசமாப்பேட்டை, நவ. 16— தி. மு. கழகக் கட்டடத்தில், சொற்பயிற்சிக்கூட்டம் 18-11-53 அன்று இரவு 8-30 மணிக்கு, செயலாளர் பி. எம். கோபால் அவர்கள் தலைமையில் நடைபெறும். அதுபோது, தோழர்கள் ஈ. ஆர். கிருஷ்ணன், கே. ஏ. நடராசன், கே. ஏ. வெங்கடாசலம், சிற்றரசி ஏ. சுப்ரமணியம், கே. என். மணி ஆகியோர் பேசுவர்.

பிரெஞ்சு பகுதிகள்

ஒழித்துக்கட்ட சர்வ கட்சியினருக்கும் வேண்டுகோள்

பிரெஞ்சு இந்திய கம்யூனிஸ்டு கட்சி மாநாட்டில் முடிவு

கடலூர், நவ 15— இந்தியாவிலுள்ள பிரெஞ்சுப் பகுதிகளை ஒழித்துக்கட்ட, பிரெஞ்சுப் பகுதிகளிலுள்ள எல்லாக் கட்சிகளும் சேர்ந்து ஒன்றுபட்டுப் போராடவேண்டுமென பிரெஞ்சு இந்தியப் பொதுவுடைமைக் கட்சி மாநாடு தீர்மானித்துள்ளது.

பிரெஞ்சு இந்திய கம்யூனிஸ்டு கட்சி மாநாடு நவம்பர் 8, 9, 10-ந் தேதிகளில் கடலூரில் நடைபெற்றது. இந்த மாநாடு, வி சுப்பையாவும், மற்றும் இருவரும் கொண்ட ஒரு கமிட்டியின் தலைமையில் நடைபெற்றது.

பிரெஞ்சு இந்தியாவில் அதிகார வர்க்கத்தினர் கையாளும் அடக்குமுறையைக் கண்டித்து ஒரு தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

பிரெஞ்சு இந்தியப் பகுதிகள் பற்றி இந்திய சர்க்கார் வெளியிட்டுள்ள அறிக்கையை வரவேற்றும், பிரெஞ்சு இந்தியப் பகுதிகளை விடுவிக்க சகல கட்சிகளும் ஒன்றுபட்டுப் போராட வேண்டுமென்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இலங்கையில் தி.மு. கழக கூட்டம்

"புத்தர் ஆரம்பித்த புதுமைக் கருத்துக்கள் தோல்வி கண்டதற்கு பார்ப்பனர்களும், அவர்களது பக்தகோடிகளும்தான் காரணம். அதற்குப் பிறகு இந்திய மண்ணிலே எந்த எதிர்ப்புகளுக்கும் இடைசந்து விடாமல் வெற்றிப் பாதையிலே வீரநடை புதுமைக் கருத்துக்களைக் கொண்டு முன்னேறி வரும் இயக்கம் தி. மு. கழகம்தான்,"

என்று இலங்கை பலாங்கொடைப் பகுதியிலுள்ள பெட்டிகலை என்ற தேயிலைத் தோட்டத்தில் 7—11—53ல் நடைபெற்ற தி. மு. கழகப் பொதுக்கூட்டத்தில் தோழர் டி. எம். பீர்முகம்மது கூறினார்.

திராவிடம் பிரிய வேண்டிய அவசியம் பற்றியும், தென்னாட்டு அரசியல் நிலை பற்றியும் இலங்கை அரசியல் பற்றியும் பேசினார். கூட்டத்திற்கு தோழர் வகாப் அவர்கள் தலைமை தாங்கினார். தோழர்கள் அருளப்பன், சாமிக்கண்ணு ஆகியோரும் பேசினர். தூத்துக்குடி சதி வழக்கை வாபஸ் வாங்கும்படி சென்னைப் பிரதமருக்குத் தந்தியும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

திறமைக்குப் பாராட்டு

திருவெண்ணெய்நல்லூர், நவ 13— இவ்வூர் தி மு கழகத் தோழர் ஜானிபாஷா என்ற 21 வயது இளைஞர், மாலை 6 மணி முதல், மறுநாள் மாலை 6 மணி வரை இடைவிடாது சைக்கிள் விட்டு வெற்றிபெற்றதை முன்னிட்டு, இவ்வூர் போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் தலைமையில் பாராட்டுக் கூட்டமும், ஊர்வலமும் நடைபெற்றது. வெற்றிபெற்றத் தோழருக்கு தி. மு. கழகக் கொடி மாலை அணிவித்தனர். பொதுமக்களும் [illegible] அளித்தனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் [illegible]செழியன், எம். ஏ., அவர்களால், அழகிய அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, குளிய நாராயண செட்டித் தெரு, பூரசைவாக்கம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.